


# 12வது ஞானச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

## அவர்களின் எழுத்துக்கள்





11வது ஞானச்சாரியார்

12வது ஞானச்சாரியார்

**வைகாசி மாத வெளியீடு (May-June 2012)**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**

**உள்ளுறைத் தலைப்பு**

# பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்

**[பார் ஆண்ட தமிழர்கள் பராரிகளைப் போலப் பிறரின் பாதுகை தாங்கி வாழும் பரிதாப நிலைகளைப் போக்கிடும் ஆற்றல் இந்தப் பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளுக்கு உண்டு.]**

தமிழ் மொழியின் பெயராலோ! தமிழ்நாட்டின் பெயராலோ! தமிழினத்தின் பெயராலோ! தமிழ்ப் பண்பாட்டின் பெயராலோ! .... செயல்படப் புறப்படுகின்றவர்கள் அனைவரும் இந்தப் **பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்** எனும் செயல்திட்டத்தை முறையாகவும், முழுமையாகவும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, விருப்பத்தோடு செயலாக்க முற்பட வேண்டும். அப்பொழுதுதான், உண்மையிலேயே தமிழினத்திற்காக பாடுபட முன்வருபவர்கள் ஊசிமுனையளவாவது நிலையான பயனுள்ள சாதனையைச் சாதிக்க முடியும்! சாதிக்க முடியும்! சாதிக்க முடியும்! அப்படி யில்லாவிட்டால் தமிழின நலத்துக்காகப் பாடுபடுபவர்கள் அனைவருமே தோற்றவர்களாக, பொய்யர்களாக, ஏமாற்றுக் காரர்களாக, கருத்துக் குருடர்களாக, தன்னலவெறி பிடித்த கோழைகளாக, தமிழினத் துரோகிகளாகத்தான் வாழ்ந்து செல்ல நேரிடும்! வாழ்ந்து செல்ல நேரிடும்! வாழ்ந்து செல்ல நேரிடும்!

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Siddhar Arasayogi Karuvooraar. Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed by Ganapathi Printers, Camp Road, East Tambaram, Chennai..

# பதினெண்சித்தர் பீடாதிபதியின் 18 அருளாட்சி ஆணைகள்

## முன்னுரை

**அருளாட்சி நாயகம், ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, இராசிவட்ட நிறைவுடையார், அரசயோகி, குருதேவர் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் குவலய குருபீடம், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர்**

"சித்தர் நெறி" எனும் "மெய்யான இந்துமதம்" பற்றிய விளக்கங்களையும், வரலாறுகளையும், நாயக நாயகிகளின் வாழ்வியல்களையும், போதனைகளையும், சாதனைகளையும், அடிப்படைத் தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும், ........ முறையாக வழங்கும் பணி அணிபெற்றால்தான் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாடும்', 'உலகச் சமய ஒற்றுமையும்', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும்', 'மொழிவிடுதலையும்', 'இன விடுதலையும்', 'பண்பாட்டுரிமையும்', 'நாகரிக உரிமையும்', 'நாடுகளின் தன்னாட்சிப் பெருமையும்', 'தனிமனிதத் தன்னம்பிக்கை மிகு தன்மானப் பிடிப்பும்', 'உலக அருளாட்சிச் செழுமையும்', ....... உருவாகிடும்! உருவாகிடும்! உருவாகிடும்!

இம்மண்ணுலகின் முதல் மானுட இனமாகவும், மெய்யான இந்துமதத்தின் மூலமாகவும், உள்ளீடாகவும், காவலாகவும் இருக்கின்ற தமிழினத்தின் விடுதலை வாழ்வில்தான் மானுடத்தின் வருங்கால நலமேயுள்ளது. ஆனால், இம் மண்ணுலகிலேயே தன்னுணர்வோ! தன்னம்பிக்கையுணர்வோ! மொழிப்பற்றுணர்வோ! பண்பாட்டுப் பிடிப்புணர்வோ! நாகரிக விடுதலையுணர்வோ! ... விழிச்சியடையாமல் பிறரிடம் கூலியாகவும், பிறருக்கு வேலியாகவும் அடிமை வாழ்வே வாழுகின்ற ஓரினமாகப் பன்னெடுங்காலமாக மிடிமையுற்றுக் கிடக்கிறது இந்தத் தமிழினம். இதற்குக் காரணம் இவர்கள் வரலாற்றறிவும், இலக்கிய அறிவும், மத அறிவும் முறையாக வளர்த்துக் கொள்ளாமல் பிறமதங்களுக்கு வேட்டைப் பொருளாகவும், விளையாட்டுப் பொருளாகவும் இருந்து வருவதுதான்.

யாம், எமது பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளிலும், முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளிலும் பாரம்பரியமாக எம் மீது சுமத்தப்பட்டுவிட்ட பணிகளை எப்படி நிறைவேற்றப் போகிறோம் என்ற எண்ணப் போராட்டத்தில்தான் கழித்தோம். யாமறிந்த செய்திகளை வாய்விட்டுப் பேசிடக் கூட எமக்குரிய வாய்ப்பு, வசதி, சூழல், ..... உருவாகவில்லை. எமது ஏட்டறிவும், கேள்வியறிவும், பட்டறிவும் இப்புவிப் பரப்பு முழுதும் விரிந்து, பரந்து, நிறைந்து நிகழ்ந்துற்றன. இருந்தும், யாம், எமது தாயகத்தில் ஓர் அன்னியனாக! புதியவனாக!... நகரங்களிலும், ஊர்களிலும், கிராமங்களிலும், பட்டி தொட்டிகளிலும், மனித நடமாட்டமற்ற காடுகளிலும் அலைந்து திரிவதே வாடிக்கையான வாழ்க்கையாகி விட்டது. இருந்தும், வருந்தாமல், முப்பத்தாறு ஆண்டுகளுக்கு மேல் தனித்தே போராடினோம்...... பயனில்லை.

இப்போது ஆயிரமாயிரம் படித்த, படிக்கின்ற, படிப்பறிவே இல்லாத இளைஞர்கள் எமது கனவுகளை நனவாக்கிடத் தீரமிக்க தியாகங்களையும், வீரமிக்க செயல்களையும், துணிவுமிக்க பணிகளையும், முழுநேர முயற்சிகளால் தொண்டு புரிகிறார்கள். இவர்களுடைய கட்டுக்கடங்காத காட்டாற்றுப் போக்குடைய பேரார்வத்தாலேயே; யாம், எமது மோன ஞான நிலைகளை விடுத்துச் சில செய்திகளை எழுதாக் கிளவிகளாக வழங்கியும்

செயலாற்றுகிறோம். அதாவது, ‘நமது தாயக மக்கள் கணிசமான அளவாவது தங்களுடைய பழமைகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும், அக்கரையும் பெற்ற பிறகுதான், பதினெண் சித்தர் பீடாதிபதிகளைப் பற்றியும், சித்தர் நெறி பற்றியும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாயிரமாண்டுக்கும் மேற்பட்ட போதனை, சாதனை பற்றியும்....... வெளிப்படையாகப் பேசலாம், எழுதலாம்......’ என்று எமது தந்தையார் அருள்மிகு சித்தர் காக்கையர் எனும் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் கூறிச் சென்ற எச்சரிக்கை அறிவுரையையும் மீறியே செயல்படுகிறோம் யாம்.

எமது தாயக மக்களோ பெரும்பாலும் மிகமிகக் குறுகிய வட்டங்களுக்குள்ளேயே வாழ்ந்து சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் துறைகள் அனைத்தையும் சூறுவளிக்குட்பட்ட கடலலைகளாக்கி யுள்ளார்கள். இந்தச் சூறுவளிக் கடலலைகளுக்கிடையில்தான் கலம் செலுத்துகிறோம் யாம். கரை சேருவது பற்றிக் கனவு காணக் கூட இயலாது. இருந்தாலும் நல்ல இளைய சமுதாயத்தை நம்பிப் பயணத்தைத் துவக்கி விட்டோம் யாம்.

நமது நாட்டில் எதெதற்கோ வாரிவாரி வழங்கக் கூடியவர்கள் நிறைய இருக்கிறார்கள். இவர்களில் ஒருவராவது நமது முன்னோர்களின் போதனைகளையும், சாதனைகளையும், வரலாறுகளையும், வாழ்வியல்களையும்....... உலகறியச் செய்ய வேண்டுமென்று நினைத்து எம்மவர்களுக்கு உதவிட முன்வந்தால் போதும். யாம், வெறும் ஏட்டுச் சுரக்காய்களை மட்டும் உருவாக்கவில்லை. இவ்வுலகிலுள்ள 48 வகையான வழிபாட்டு நிலையங்களையும், கருவறைகளையும் பெரிய அளவில் புத்துயிர்ப்புச் செய்யும் அருளாளர், அருளாளி, அருளாடு நாயகம், மருளாளர், மருளாளி, மருளாடு நாயகம்,....... எனும் ஆறுவகையினரையும் தொடர்ந்து உருவாக்கி வருகிறோம் யாம். மேலும், எம்மால் இப்பார் முழுதும் பரவலாக உருவாக்கப்பட்டுள்ள கருகுலங்கள், குருகுலங்கள், தருகுலங்கள், திருகுலங்கள், பத்திப்பாட்டைகள், சத்திச் சாலைகள், முத்திச் சோலைகள், சித்திக் கோட்டங்கள், தவப்பள்ளிகள், ஞானமடங்கள், அருவுருவச் சமாது பீடங்கள்....... முதலியவை நன்கு செயல்பட்டு அருளுலக வாரிசுகளைப் போதுமான அளவுக்கு மேல் உருவாக்கிவிட்டன.

எனவே, இனியும் நாம், இலைமறைகாயாக, நிலவறைச் சொத்தாக...... இருக்கத் தேவையில்லை என்று எண்ணினோம். ஆனால், எமது தாயக மக்களிடையே எமது நிலை தொடர்ந்து அன்னிய நிலையாக இருந்துவிடக் கூடாது என்றஞ்சுகிறோம் யாம். பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிக் கேற்பட்ட நிலையை எண்ணிக் கலங்குகிறோம் யாம். அவருக்கே நம் தாயக மக்கள் தோல்வியை நல்கினார்கள் என்பதை எண்ணியெண்ணியே மயங்குகிறோம், தயங்குகிறோம் யாம்.....!?!?!? வழக்கம் போல் நம்மவர்கள் எம்மை எமது காலத்தில் பயன்படுத்திக் கொள்ளாமல் போய்விடக் கூடாது என்ற கருத்தில்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், இதன்கீழ் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட அமைப்புக்களையும் உருவாக்கிச் செயல்படுகிறோம் யாம்.

சித்தர் நெறியைப் பகுத்தறிவுப் போக்கிலும், விஞ்ஞானச் சூழலிலும், வரலாற்றடிப்படையிலுமே வளர்த்து வருகிறோம் யாம். காலப் போக்கில் தோன்றிய கற்பனைகளையும், மடமைகளையும், கண்மூடித்தனங்களையும், மூடப் போக்குகளையும், குருட்டு நம்பிக்கைகளையும்,....... வெளிப்படையாக விவாதித்து விளக்கங் கண்டு விலக்கியே மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளோம் யாம். மேலும், மதத்தின் பெயரால் மடமையோ,

மூடநம்பிக்கையோ, முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையோ, முதலாளித்துவத்தை நியாயப் படுத்தலோ, தொழிலாள அடிமைத்தனத்தை அறநெறியாக்குதலோ, பெண்ணடிமையைச் சட்டமாக்குதலோ, பிச்சைக்காரர்களையும், சோம்பேறிகளையும் வளர்த்தலோ, ஏமாற்றுக்காரர்களையும், சுரண்டல் காரர்களையும் ஆதரித்தலோ........ வளர்க்கப் பட்டுவிடக் கூடாது என்பதாலேயே யாம்; மதக் கருத்தரங்குகளையும், வினா விடைக் கூட்டங்களையும், ஆய்வு மன்றங்களையும் தொடர்ந்து நிகழ்த்தி வருகிறோம் யாம்.

ஒருவேளை, எமக்கும் தோல்வியேற்பட்டிடுமோ என்றஞ்சியே எம்மோடு ஞானவாழ்வு வாழ்ந்த நிர்வாணிகளும், சத்தி யோகிகளும், சித்தி மகான்களும், கபாலிகர்களும், துறவிகளும், பைராகிகளும், தவசிகளும்,....... தங்கள் தங்கள் விருப்பம் போல் இமயத்தின் மடியிலும், மலைகளின் முடிகளிலும், அடர் காடுகளிலும், பாழிடங்களிலும், விடரகங்களிலும்,....... வெறிமிகு அருள்வாழ்வு வாழுகிறார்கள். அதாவது, தோல்வியே வெற்றியாக்கித் தரும் வீரசத்தியாக, மாசத்தியாக, போர்க்காலக் கொற்றவையாக, காடுகிழாளாக....... வாழ்ந்து வரும் அருளாளர்கள் இந்துமத மறுமலர்ச்சியை இந்திய நாட்டின் சமய சமுதாய அரசியல் துறைகளுக்குரிய முழுமைப் புரட்சி யாக்கிடுவதற்காகக் காத்திருக்கிறார்கள்.

எனவேதான், யாம் எதையும் நிதானமாக, சமாதானமாக, கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் அன்பு வழியில், அறவழியில், அருள்வழியில், ஆரவாரமின்றி அமைதியாகச் செய்திட முயலுகிறோம். ஆனால், தமிழினத் துரோகிகளும், விரோதிகளும் சாதுரியமாகச் சிக்கல்களையும், சீற்றங்களையும் வளர்க்கிறார்கள். இவற்றை முறியடிக்க வேண்டுமென்றால் 'தனித்தமிழ் இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழ்ப் பண்பாட்டு வளவளர்ச்சி இயக்கம்', 'தமிழிலக்கிய மறுமலர்ச்சி இயக்கம்', 'தமிழ்ச் சமய விழிச்சி இயக்கம்', 'தமிழ்ச் சமுதாய ஒற்றுமை வளர்ச்சி இயக்கம்', 'தமிழின அரசியல் செழிச்சி இயக்கம்', ...... எனப் பல இயக்கங்கள் பலரின் தலைமையில் அருகு போல் தோன்றி ஆல்போல் தழைத்திடல் வேண்டும். நமது மதம்தான், நமது மொழியை, கலையை, அகப்பண்பாட்டை, புறநாகரிகத்தை, சமுதாயக் கட்டமைப்பை, தனிமனித வாழ்வின் ஒழுங்கை, அரசியல் நேர்மையை........ வளர்த்து வந்திருக்கிறது! வளர்த்து வந்திருக்கிறது! வளர்த்து வந்திருக்கிறது! என்ற பேருண்மையை நம்மவர்களாவது நன்கு புரிந்தும் புரிய வைத்தும் செயல்பட வேண்டும்.

இந்த நூலில் மட்டுமின்றி வேறு எந்த நூலானாலும் சரி; எமது முன்னோர்களின் படைப்புக்களில் ஓர் எழுத்தைக் கூட மாற்றாமல், திருத்தாமல் வெளியிடும் பணியைத்தான் செய்கிறோம் யாம். எனவே, எமது படைப்பல்லாத இது போன்ற நூல்களில் உள்ள எந்த வாசகத்தையும், எந்தக் கருத்தையும் எம்முடையதாகக் கருதத் தேவையில்லை. அதாவது, யாம், எமது முன்னோர்களின் கருத்துக்களையும், வாசகங்களையும் அப்படியே இன்றைய தாயக மக்களுக்கு வழங்கியுள்ளோம். இவற்றைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட வேண்டிய பொறுப்பை எம்காலத்து மக்களுக்கு ஒப்படைக்கிறோம் யாம்.

யாம், எமது காலத்தின் தத்துவமாக, சித்தாந்தமாக, இலக்கியமாக, வரலாறாக,...... வாழ முயலுகிறோம். யாமே, 'எமது வாழ்வை ஒரு தெய்வீகச் சோதனையாக [My life is the Test of Divinity] அறிவித்துச் செயல்படுகிறோம். எனவே, எமது போதனைகளையும், சாதனைகளையும் முயற்சிகளையும் நடுநிலையாளர்களாகவாவது இருந்து எம் தாயக மக்கள் ஆய்வு

செய்யட்டும் என்று வேண்டுகோள் விடுத்துக் கொள்கிறோம் யாம்.

தமிழ்மொழியிலேயே அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களும், கருவறைகளும், வெட்டவெளிக் கருவறைகளும் புத்துயிர்ப்புச் செய்யப்படல் வேண்டும். இதற்குரிய மந்திற, மந்திர, மந்தர, மாந்தர, மாந்தரீகங்களும்; தந்திற, தந்திர, தந்தர, தாந்தர, தாந்தரீகங்களும்; எந்திற, எந்திர, எந்தர, ஏந்தரீகங்களும்; ஐந்திறங்களும், ஐந்திரங்களும், ஐந்தரங்களும், ஐந்தீ வேட்டல்களும்; முத்தீ ஓம்பல்களும், பூசாவிதிகளும், பூசைமறை, முறை, நெறி, வேதங்களும்; பூசை மரபுகளும், கருவறைப் படிகளும், குடமுழுக்குச் சாத்திற, சாத்திர, சாத்தரங்களும்; தோத்திற, தோத்திர, தோத்தரங்களும்; நேத்திற, நேத்திர, நேத்தரங்களும்; வேத்திற, வேத்திர, வேத்தரங்களும்; அத்திற, அத்திர, அத்தரங்களும்; சூத்திற, சூத்திர, சூத்தரங்களும்; சித்தங்களும், நாதங்களும், போதங்களும், ஓதங்களும், சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைகளும்; நேம, நியம, நிடத, நிட்டை நீதிகளும்; நான்மறைகளும், நான்முறைகளும், நானெறிகளும், நான்வேதங்களும் ..... முறைப்படி சித்தர்நெறியின் மரபுகள் வழுவாமல் ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் கற்றுக் கொடுக்கக் கூடிய வாய்ப்பு வசதிகளை உருவாக்க முயலுவதே எமது பணி. இப்பணிக்குத் தேவையான ஏந்துகளையும், உதவிகளையும், உறுதுணைகளையும், ஆதரவுகளையும் நல்குமாறு அனைவரையும் வேண்டி விரும்பிக் கேட்டபடி இந்த முன்னுரையை நிறைவு செய்கிறோம், யாம்.

**அன்பு**

**குவலய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர்**

# பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்

பிற்காலச் சோழப் பேரரசை [கி.பி.785 - 1279] ஓர் அருட்பேரரசாகச் செயல்பட உருவாக்கிய பதிநோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள்; தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி நிறைவு செய்யும் நிலையில் வெளியிட்ட **பதினெட்டு அருளாட்சி ஆணைகள்**. இவர் உருவாக்கிய தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் அனைத்துத் துறை ஆசிரியர்களும் மாணுக்கர்களும் விரும்பி ஏற்றுப் போற்றிப் பேணிப் பரப்பிட்ட சிறப்பினைப் பெற்றவை இந்த ஆணைகள்.

இந்தப் பதினெட்டு அருளாட்சி ஆணைகளைத் தஞ்சைப் பேரரசின் ஆணைகளாக அறிவிக்கத் தயங்கினான் முதலாம் இராசராச சோழன் எனும் அருள்மொழித் தேவன். இவன் ஏற்கனவே தனது அண்ணனும், சோழப் பேரரசின் இளவரசனும் ஆன ஆதித்த கரிகாலனின் கொலை பற்றிய விசாரணையில் பொறுப்பில்லாமல் காலதாமதம் செய்ததால்; பீடாதிபதியின் கோபத்திற்கு ஆளாகியிருந்தான். எனவே, பீடாதிபதி நேரடியாகத் தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றிய நிறுவன நிர்வாகத்தைப் பற்றியும்; நாடு தழுவிய அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களின், கோயில்களின் நிறுவன நிர்வாகத்தைப் பற்றியும், தமிழின ஆரிய போராட்டத்தைப் பற்றியும் தமிழுக்கும் சமசுக்கிருதத்திற்கும் நிகழ்ந்து கொண்டிருந்த போரைப் பற்றியும் முதலாவது இராசராசனிடம் விவாதித்தார்.

அவனோ பிறமண்ணினரான பிருமணர்கள் எனும் வட ஆரியர்களின் கைப்பாவையாகவும்,

சமசுக்கிருத மொழியின் அடிமையாகவும், பொய்யான ஹிந்து மதத்தின் மாயையில் மாட்டிக் கொண்டவனுகவும் இருந்தான். எனவே, எதையுமே முடிவாக தெரிவிப்பவனுகவோ, செய்பவனுகவோ இல்லை அவன். எனவேதான் பீடாதிபதி அவர்கள் ஒரு மிகப் பெரிய உள்நாட்டுப் போர் உருவாகும் நிலையைத் தோற்றுவித்தார். ஆனால், இராசேந்திர சோழனும் [இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன்] அரச குலத்துப் பெண்டிர்களும் தஞ்சைப் பெரிய கோயிலுக்கே வந்து பீடாதிபதியிடம் மன்னிப்புக் கேட்டும், 'அருட்பேரரசை அவரே உருவாக்கி அவரே அழித்து விடக் கூடாது' என்று வேண்டிக் கொண்டதாலும், பீடாதிபதி [முதலாம்] இராசராசனுக்குச் சாபங்களைக் கொடுத்துத் தன்னுடைய தேவியர் மூவருடன் நிலவறைக்குள் சென்றிட்டார். அந்த மாபெரும் நிகழ்ச்சியால் விளைந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியாமலும்; அந்த நிகழ்ச்சிக்கு ஏதும் பரிகாரம் செய்ய முடியாமலும் ஏங்கி மயங்கிக் கலங்கிய [முதலாம்] இராசராசன் தஞ்சைப் பெரிய கோயிலின் உச்சியிலிருந்து அக்கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் சன்னதியின் முன் தலை குப்புறக் குதித்துத் தற்கொலை செய்து கொண்டான்.

இந்த இருபெரும் நிகழ்ச்சிகளும் அருட்பேரரசின் எல்லைகளுக்கும் அப்பாற்பட்டு அருளுலகிலும் பொருளுலகிலும், அரசியலிலும், சமுதாயயியலிலும், மதத் துறையிலும் ... மாபெரும் வீழ்ச்சிகளை நெடுங்காலம் பரபரப்போடு ஏற்படுத்தின. எனவேதான், பீடாதிபதியின் 'பதினெட்டு அருளாட்சி ஆணைகள்' அனைத்து வகையான சித்தர்களின் நூல்களிலும் நிலையான இடத்தைப் பெற்றிருக்கின்றன. பீடாதிபதியின் திருமகனுர் கருவூர்த் தேவரும், பேரன் திருமாளிகைத் தேவரும் மேற்படி பதினெட்டு அருளாட்சி ஆணைகளையும் செயலாக்க முயன்று முழுமையான வெற்றியினைப் பெற முடியாமல் போய்விட்டது.

இப்படிப் பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளும், இவற்றைத் தோற்றுவித்தவராலும், அவரது மகனுலும், பேரனுலும் செயலாக்கப் படுகின்ற முயற்சியில் மாபெரும் தோல்வி அடைந்த காரணத்தினுல் மிகப் பெரிய அருட்பேரரசு வீழ்ச்சியுற்றது. தமிழினம் தாழ்ச்சியுற்றது. மெய்யான இந்துமதம் மிகப் பெரிய சிதைவுகளையும், சீரழிவுகளையும், சிக்கல்களையும் பெற்று இருந்த இடம் தெரியாமல் உள்ளது. எனவேதான், காலங்கள் தோறும் இந்துமத மறுமலர்ச்சிக்காகப் பாடுபட முன்வருகின்ற அனைத்து வகையான சித்தர்களும் மேற்படி பதினெட்டு அருளாட்சி ஆணைகளையே தங்களுடைய கொள்கையாகவும், குறிக்கோளாகவும், செயல்திட்டமாகவும், தங்களின் வாழ்வியல் சித்தாந்தமாகவும், தத்துவமாகவும் ஏற்றுச் செயல்படும் நிலை தொடர்ந்து வருகிறது.

அதாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியால் உருவாக்கப் பட்ட பதினெட்டு அருளாட்சி ஆணைகளும் இலைமறை காயாகவே ஓராயிரம் ஆண்டுகளாக இருந்து வருகின்றன. இந்தச் சோக வரலாற்றை ஏட்டளவிலும், நாட்டளவிலும் வெளிப்படுத்தும் பணிதான் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் தமது நாளோலக்க நிலையிலும் திருவோலக்க நிலையிலும் இருந்து வழங்குகிறுர். எனவே, மெய்யான இந்துமதத்தின் மூலவர்களாகவும் காவலர்களாகவும்

அருட்செல்வர்களாகவும் இருக்கின்ற தமிழின மக்கள் தங்களே அறிந்து தலைவனே அறிந்து கொள்ள முற்பட வேண்டும். அல்லது தலைவனே யறிந்து தங்களே யறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தமிழினம் வீழ்ச்சிகளிலிருந்தும், தாழ்ச்சிகளிலிருந்தும், இழிநிலைகளிலிருந்தும், பழி நிலைகளிலிருந்தும், அடிமை நிலைகளிலிருந்தும் ... விடுபடுவதற்குரிய விழிச்சி நிலைகளேயும், எழிச்சி நிலைகளேயும், கிளர்ச்சி நிலைகளேயும்..... பெற்றுச் செழிச்சியடைய முடியும்! செழிச்சியடைய முடியும்! செழிச்சியடைய முடியும்!

அதாவது, தமிழர்கள் தங்களுடைய பண்பாட்டுக்கும் நாகரீகத்துக்கும் மூலமாக உள்ள குருகுலத்தார்களே இனம் கண்டு ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயனடைய வேண்டும்! பயனடைய வேண்டும்! பயனடைய வேண்டும்! இதன் பிறகே, தமிழர்கள் தங்களுடைய பழம்பெரும் வரலாறுகளே விளக்கும் சான்றுகளேயும், ஊன்றுகளேயும் ஏடுகளாக, புதைமேடுகளாக, குகைகளாக, கோயில்களாக, பாழடைந்த மாளிகைகளாக, பழுதடைந்த புதைபொருள்களாக.... அப்படி யப்படியே பாதுகாத்து ஆராய்ச்சிகளேச் செய்து அறிவார்ந்த மறுமலர்ச்சிக்குரிய ஞானப் புரட்சிகளேச் செய்வார்கள்! செய்வார்கள்! செய்வார்கள்! இதற்காகத் தங்களுடைய சங்க இலக்கியங்களேயும், மற்ற இலக்கியங்களேயும் அவசரப் பட்டுப் புராண இதிகாசங்கள் என்றோ அல்லது நாடோடிப் பாடல்கள் என்றோ வெறுத்து ஒதுக்கிடாமல் ஏற்றுப் போற்றிப் பயன்படுத்திடும் நிலே உருவாக வேண்டும்.

தமிழர்கள்தான் இம்மண்ணுலகின் முதல் குடியினர், மூத்த குடியினர் என்ற பெருமைக்கும் உரிமைக்கும் உரியவர்கள் என்பதால்; இந்தத் தமிழர்கள் ஒன்று திரண்டு ஒற்றுமைப் பட்டு ஒருமைப்பட்டிட்டால்தான் உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும்; உலக சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்க முடியும். இதற்காகத்தான் தமிழர்களே மொழி வழியாகவாவது மதவழியாகவாவது ஒற்றுமைப் படுத்தும் நிகழ்ச்சி முயற்சி பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் தொடர்ந்து மீண்டும் மீண்டும் நிகழ்த்தப் பட்டு வருகின்றது. இந்தக் கலியுகத்தில் மட்டும்தான் மாற்றூர்களும், வேற்றூர்களும் ஏமாற்று வேலைகளால் தமிழர்களின் ஒற்றுமை உருவாக முடியாமலேயே செய்து வருகிறூர்கள். இதனுல், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதிக்கு ஏற்பட்டிட்ட தோல்வி வரலாறே இப்போதும் தொடர்கிறது. இதற்காகத் தமிழர்களே தங்களேத் தாங்களே உணர்ந்தும், தன்னம்பிக்கை பெற்றும், இன ஒற்றுமையை விரும்பியும் செயல்படக் கூடிய ஒரு புதுமையான விழிச்சியான, எழிச்சியான நிலைகளே உருவாக்க முயற்சிக்கிறோம், யாம்.

இந்த முயற்சியின் வடிவமாகவே, தமிழ்மொழி பற்றிய நூல்களும், தமிழிலக்கியங்களின் தொகுதிகளும், மெய்யான இந்துமதம் பற்றிய நூல்களும் கணக்கற்று படிகள் எடுக்கப் பட்டு நாடெங்கும் வழங்கப் பட்டு வருகின்றன. ஏட்டறிவுடையோர் குறைவாக உள்ளனர் என்பதால், மேற்குறித்த ஏடுகளில் உள்ள செய்திகளே ஆங்காங்கே எடுத்துக் கூறி விளக்கும் பணிகள் பல வடிவங்களில் நிகழ்கின்றன. குக்கிராமத்திலிருந்து பெருநகரம் வரை மந்தைகளிலும், மன்றங்களிலும், சந்தைகளிலும், சாவடிகளிலும், சத்திரங்களிலும், மண்டபங்களிலும், கோயில்களிலும் கதைகளேயும், காதைகளேயும், (கவிதைகளேயும்), காப்பியங்களேயும், கீதைகளேயும் அன்றூடம் விரித்துரைத்து அறிவுச் சுடர் கொளுத்தும் பணி தொடர்ந்து நிகழ ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன எம்மால்.

இப்படி யெல்லாம் அரும்பாடுபட்டு வளர்த்த மெய்யான இந்துமதத்தைக் கட்டிக் காத்திட தமிழர்களில் குருமார்கள், குருக்கள்கள், அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், பூசாறிகள், ஓதுவார்கள், பண்டாரங்கள், ஐந்திறத்தார்கள், எந்திறத்தார்கள், மந்திறத்தார்கள், .... முதலியவர்கள் தோன்றிட வேண்டும். ஆனால், தமிழர்களில் பொய்யான ஹிந்துமதத்தில் நம்பிக்கையுடையவர்களும், பயனற்ற சமசுக்கிருத மொழியில் ஆர்வமுடையவர்களும்தான் இருக்கிறார்கள். எனவே, தமிழர்களை இனப்பற்றும், தன்னம்பிக்கையும், தன்மானப் பிடிப்பும், விடுதலை உணர்வும், நாட்டுணர்வும், பண்பாட்டுணர்வும், சமுதாயக் கட்டமைப்பும், அரசியல் ஒழுங்கமைப்பும் உடையவர்களாக உருவாக்கிடுவதற்காகத் தமிழ்மொழியை மட்டும் பயன்படுத்தாமல், தமிழர் மதமான சித்தர் நெறி எனப்படும் மெய்யான இந்துமதத்தையும் பயன்படுத்தியேயாக வேண்டும்.

அதாவது, தமிழ்மொழி யறிவும், மெய்யான இந்துமதத்தின் அறிவும்தான் தமிழர்களை மீண்டும் தமிழர்களாக்கி ஒற்றுமையும், ஒருமைப்பாடும் பெறச் செய்ய முடியும். இதற்காகத் தமிழர் அல்லாதார் யாராக இருந்தாலும் தமிழர்களுடைய சமய சமுதாய அரசியல் இலக்கியத் துறைகளில் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த அளவு தமிழர்களுக்கு இன உணர்வும், மொழியுணர்வும், தன்னம்பிக்கையும், பண்பாட்டுப் பிடிப்பும் ஏற்படுவதற்கு மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சி ஒன்றுதான் வழி. இதற்குரிய செயல்திட்டமே பதினெண் சித்தர்களின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள். இதனைப் புரிந்தும், புரிந்து கொள்ளாமல் நாடாளுபவர்களும் நாட்டு மக்களும் மதத் துறையை யாருடைய தலையீடும் இல்லாத ஒரு தனித் துறையாகச் செழிப்போடு போற்றி வளர்க்க வேண்டும் என்ற உணர்வைப் பெறாமல் இருக்கிறார்கள். இந்த உணர்வு வளவளர்ச்சி பெற்றிட்டால்தான் தமிழினம் பற்றும், பாசமும் மிக்க ஒற்றுமையைப் பெற்றிடும்.

தமிழர்கள் தங்களுடைய முன்னோர்களின் இடிபாடுற்றுக் கிடக்கும் கோட்டைக் கொத்தளங்களையும், மாளிகைகளையும், இருளடைந்து கேட்பாரற்றுக் கிடக்கின்ற அனைத்து வகையான கோயில்களையும் முடிந்த வரை செப்பனிட்டு முதியோர் முதல் இளஞ்சிறார் வரை அவற்றைக் காட்சிப் பொருளாகவாவது கண்டு களிக்குமாறு செய்தல் வேண்டும். ஏனென்றால், இவைதான் அகப் பண்பாட்டையும், புற நாகரீகத்தையும் கற்றுத் தருபவைகளாகவும், போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பவைகளாகவும் இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் ஏடுகளில் எழுதியுள்ள இலக்கிய இலக்கணங்களைப் படிப்பது போல் நாட்டு நடப்பில் அநுபவக் கல்விச் சாதனங்களாக நமது முன்னோர்களால் விட்டுச் செல்லப் பட்டிருக்கின்ற அனைத்து வகையான கோயில்கள், கோட்டை கொத்தளங்கள், அரண்மனைகள், மாட மாளிகைகள், முதலியவைகளை யெல்லாம் உற்று உற்றுப் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, ஏடுகளைப் படிப்பது போல; நமது முன்னோர்கள் விட்டுச் சென்ற அனைத்துக் கட்டிடங்களையும் பார்த்துப் பார்த்துத்தான் சிந்தையாலும் நெஞ்சத்தாலும் படிக்க வேண்டும்.

இந்தச் செயல்திட்டம், பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள் மூலம்தான் நிறைவேற்றப் பட்டிடும். ஏனெனில், இந்தப் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்தான் தமிழினத்தின் அனைத்து

வகையான தாகங்களையும், பசிகளையும், எதிர்பார்ப்புக்களையும் தணிக்கக் கூடிய அருட்கேணியின் ஊற்றுக் கண்கள். எனவே, இந்த ஊற்றுக் கண்கள் நன்கு செயல்படுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ! அவை அனைத்தும் செய்தாக வேண்டும். ஆனால், அருள்மொழித் தேவன் எனும் இராசராசன் (முதலாம் இராசராசன்) இந்தப் பணிகளை யெல்லாம் புரிந்தும் புரியாதவனாக; உணர்ந்தும் உணராதவனுமாக; தெரிந்தும் தெரியாதவனுமாக; வட ஆரிய மாயையில் சிக்குண்டு பொய்யான ஹிந்துமதத்தை வளர்த்திடுபவனாகி விட்டான்.

இன்னும் சொல்லப் போனால், அருட்பேரரசாக மலர்ந்த சோழப் பேரரசின் நிலையான தலைமைப் பீடமாக கட்டப் பட்ட கருவறைக் கோபுரம் உடைய தஞ்சைப் பெரியவுடையாரின் கோயிலை வட ஆரியரின் சமசுக்கிருத மொழிக்கும், சனாதன ஹிந்து மதத்திற்கும் காணிக்கையாக்கி விட்டான் இந்த அருள்மொழித் தேவன். எனவேதான், அருட்பேரரசின் தந்தையான பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் சோழப் பேரரசின் எந்தச் சாசனத்திலும் இலக்கியத்திலும் தன்னைப் பற்றிய செய்திகளில் எதுவுமே இடம் பெறத் தேவையில்லை! தேவையில்லை! தேவையில்லை! என்று குருவாணையிட்டுச் சென்றிட்டார். அக்குருவாணையை உடனடியாக முழுமையாக நிறைவேற்றுவதாக இராசேந்திர சோழன் (முதலாம் இராசேந்திரன்) உறுதிமொழி வழங்கியபடி செய்து முடித்தான் என்றாலும், கருவூர்த் தேவரால் தனது தந்தையின் சாதனைகளும், படைப்புக்களும், கொள்கைகளும், குறிக்கோள்களும், செயல் திட்டங்களும் வாழையடி வாழையாக மறைகளாகவும், முறைகளாகவும், நெறிகளாகவும், வேதங்களாகவும் காப்பாற்றப் படும் நிலைகள் உருவாகின.

எனவேதான், **மூவர் உலா** என்ற நூலிலும் வர்ம சாத்திறம், மருத்துவம், கட்டிடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, போர்க்கலை பற்றிய நூல்களிலும், பீடாதிபதியின் கருவழி வாரிசுகளின் நூல்களிலும் இந்தப் **'பதினெண் சித்தர்களின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளும்'** நிலைகுலையாமல் காலங்கள் தோறும் உரிய உரைநடையில் தெளிவாக வாழ்ந்து வந்திருக்கின்றன. இந்த மாபெரும் வரலாற்றுப் பேருண்மையை உணர்ந்தாவது; தமிழ் மொழியின் பெயராலோ! தமிழ்நாட்டின் பெயராலோ! தமிழினத்தின் பெயராலோ! தமிழ்ப் பண்பாட்டின் பெயராலோ! .... செயல்படப் புறப்படுகின்றவர்கள் அனைவரும் இந்தப் **பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்** எனும் செயல்திட்டத்தை முறையாகவும், முழுமையாகவும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, விருப்பத்தோடு செயலாக்க முற்பட வேண்டும். அப்பொழுதுதான், உண்மையிலேயே தமிழினத்திற்காக பாடுபட முன்வருபவர்கள் ஊசிமுனையளவாவது நிலையான பயனுள்ள சாதனையைச் சாதிக்க முடியும்! சாதிக்க முடியும்! சாதிக்க முடியும்! அப்படி யில்லாவிட்டால் தமிழின நலத்துக்காகப் பாடுபடுபவர்கள் அனைவருமே தோற்றவர்களாக, பொய்யர்களாக, ஏமாற்றுக் காரர்களாக, கருத்துக் குருடர்களாக, தன்னல வெறி பிடித்த கோழைகளாக, தமிழினத் துரோகிகளாகத்தான் வாழ்ந்து செல்ல நேரிடும்! வாழ்ந்து செல்ல நேரிடும்! வாழ்ந்து செல்ல நேரிடும்!

# பதினென் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்

**[பார் ஆண்ட தமிழர்கள் பராரிகளைப் போலப் பிறரின் பாதுகை தாங்கி வாழும் பரிதாப நிலைகளைப் போக்கிடும் ஆற்றல் இந்தப் பதினென் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளுக்கு உண்டு.]**

I. தமிழர்கள் தங்களுடைய இனத்தைச் சார்ந்தவர்களை அதிகமாக விரும்பவும், நம்பவும், மதிக்கவும், துணையாக ஏற்றுக் கொள்ளவும், வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளவும்.... நிகழ வேண்டும். அப்பொழுதுதான், தமிழினம், தன்னம்பிக்கையும், இன ஒற்றுமையும், விடுதலை வாழ்வும் பெற்றிட முடியும். இதற்காகத் தமிழ் இன நல அலுவலகங்களாகச் செயல்படும் கோயில் சொத்துக்களும் [அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்கள், கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள் முதலியவற்றையும் கோயில் என்ற சொல் இங்கு குறிக்கின்றது.] கோயில் நடைமுறைகளும், உரிமைகளும், பெருமைகளும் அந்தந்த கோயிலின் வட்டாரத்தில் உள்ள (1) கோயில் பிள்ளை, (2) முதலி, (3) பண்டாரம், (4) அம்பலம், (5) அரசு, (6) நாட்டாண்மை, (7) குருமார், (8) குருக்கள் எனும் எண்பேராயத்திடம் ஒப்படைக்கப் படல் வேண்டும். இதில் அரசோ, பெருவணிகரோ, பெருநிலக் கிழாரோ தனிப்பட்ட முறையில் தலையிடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

II. கோயில்தான் கலைப் பயிற்சிப் பள்ளியாக அரங்கேற்ற மண்டபமாக, சிற்ப ஓவியக் கூடமாக, மருத்துவமனையாக, போர்க்கலைப் பாடிவீடாக, இலக்கிய இலக்கணக் கல்விச் சாலையாக, அரசியல் வித்தகம் கற்பிக்கும் கலாசாலையாக இயங்க வேண்டும். மக்கள் மேற்படி நிலைகளைக் கோயிலில்தான் கற்றும் உற்றும் தேர்ச்சி பெற வேண்டும். ஏனெனில், தெய்வீகம் கலக்காத கலை உய்வைத் தராது. அருள் சேராத முயற்சி இருளைத்தான் சேர்க்கும்.

III. ‘கோயில்களில் ஆவி, ஆன்மா, ஆருயிர், சிந்தை, நெஞ்சம், மெய் எனும் ஆறுக்கும் தேவையான விருந்தும் மருந்தும் வழங்கப் படும் செயல்திட்டம்’ அன்னியர்களாலும், அன்னிய மொழிகளாலும் முடக்கப் பட்டு, அடக்கப் பட்டு ஒடுக்கப்பட்டு விட்டன. இவற்றைச் சரிசெய்ய வேண்டுமென்றால் அந்தந்தக் கோயில்களின் மரபுப்படி குருமார், குருக்கள், பூசாறி, ஓதுவார், பண்டாரம், முதலி, பிள்ளை, இசை வேளாளர், ..... எனப்படும் 48 வகையான கோயில் ஊழியர்களும் தமிழர்களாகவே தேர்ந்தெடுக்கப் பட்டு நியமிக்கப்பட வேண்டும். இவர்களாலேயே கோயில் பூசைகளும், சமயச் சடங்குகளும், சாத்திரியார் பணியும் பிறவும் நடந்திடல் வேண்டும்.

IV. யவனர், சோனகர், சீனர் முதலியோர்களின் கோயில்களிலே அவர்களுடைய மொழியே ஆட்சி மொழியாக இருப்பது போல், தமிழர்களின் கோயில்களில் தமிழ்மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். பிருமணர்கள் மற்ற அன்னியர்கள் போல் தங்களுக்கெனத் தனிக் கோயில்கள் வைத்து அதில் சமசுக்கிருத மொழியை ஆட்சி மொழியாக வைத்துக் கொள்ளலாம். யவனர், சோனகர், சீனர் போலப் பிருமணர்களும் தமிழர்களின் கோயிலுக்குள் வரத் தேவையில்லை. ஏனெனில், இவர்களாலும் இவர்களுடைய சமசுக்கிருத மொழியாலும்தான் மெய்யான இந்துமதம் சிதைக்கப் பட்டு பொய்யான ஹிந்துமதம் உருவாக்கப் பட்டது.

V. கோயிலில் செயல் படும் அறங்காவலர்கள், அறங்கூறவையத்தார், அரசு நாயகங்கள், அம்பலத்தார் முதலியோர்கள் அந்தந்தக் கூற்றத்திற்கும், வட்டாரத்திற்கும்

பொறுப்பேற்று அருளாட்சி புரிய வேண்டும். இதுவல்லாமல் அரசியலாரோ, பெருவணிகரோ, பெருநிலக் கிழாரோ இந்தக் கோயில் வழிச் செயல்படு அவையங்களில் தலையிடக் கூடாது.

VI. ஆண்டு தோறும் கோயில் வருவாய், தைத்திங்கள் பருவ பூசையை ஒட்டி முடிவு செய்ய வேண்டும். புதிய அவையத்தார்கள் பருவ பூசையிலிருந்து பதினெட்டு நாட்களுக்குள் தேர்ந்தெடுக்கப் பட்டாக வேண்டும். இப்படிப் புதிய நிறுவன நிருவாகம் தோன்றுவதற்கு எதிராகவோ, குறுக்காகவோ, மறுப்பாகவோ, தடங்கலாகவோ ஏதேனும் நிகழ்ந்தால் அல்லது யாராவது இருந்தால் அப்பொழுது மட்டும் அரசு நேரடியாகத் தலையிடலாம், தலையிடல் வேண்டும்.

VII. அந்தந்தக் கோயில்களில் அந்தந்தக் கிராமத்தார், ஊரார், வட்டாரத்தார், கூற்றத்தார் பொறுப்பிலேயே கல்வி, மருத்துவம், கலை, போர்க்கலை, சேவலோன் கலைகள்.... முதலியன வளர்க்கப் படல் வேண்டும். இதில் பிறமொழியினர் தலைமை தாங்குவதோ, பணிபுரிவதோ முற்றிலும் தடுக்கப் பட்டாக வேண்டும். இந்த நிறுவனங்களிலோ நிர்வாகங்களிலோ அரசு தலையிடவே கூடாது. அப்பொழுதுதான் இயற்கையான வளர்ச்சி அனைத்திலும் இருந்திடும்.

VIII. கோயில் சொத்தைத் திருடுதல், ஏமாற்றுதல், பாழாக்குதல், ஊர் சபையில் பொய்ச்சாட்சி கூறல்.... முதலிய குற்றங்களைச் செய்பவர் யாராக இருந்தாலும் அவர்கள் கோயில் நிறுவனங்களால் கட்டப்படவும், வெட்டப்படவும் அதிகாரம் இருக்க வேண்டும். இதில் அரசோ, வேறு தனிமனிதரோ வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் தலையிடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

IX. ஒவ்வொரு கோயிலிலும் அதனுடைய வருவாயிற்கு ஏற்ப பாழி, பரதேசி, பண்டாரம், சாமி, ஆண்டி, சாது, நினைவு இழந்தோர், இல்லறம் ஏற்காதார், இல்லறம் நீத்தார், இல்லறம் நிறைவு செய்தார், மாணுக்கராய் உள்ளோர்.... எனப்படுபவர்களுக் கெல்லாம் உணவு, உடை, உறையுள் கொடுக்கப் பட்டாக வேண்டும். இவர்களால் எந்த விதமான பாதிப்பும் சமயத்துக்கோ, சமுதாயத்திற்கோ எப்போதுமே ஏற்படாத வண்ணம் பாதுகாக்கும் அரணாகவே கோயில் நிறுவன நிர்வாகங்கள் இருக்க வேண்டும்.

X. அந்தந்தக் கோயிலின் நூலகம், கருவூலம், காட்சியகம், உயிரினப் பொதும்பு, பயிரினச் சோலை, பூசைமலர் தரும் பூங்கா.... முதலியவை அந்தந்த வட்டாரத்து இளைஞர்களாலும், சிறுவர்களாலும் பேணப்படல் வேண்டும். அதாவது, ஒவ்வொரு கோயிலும் அதற்கென உரிய தனித் தன்மைகளைப் பாதுகாத்து வளர்த்தேயாக வேண்டும். அப்பொழுதுதான் தனிமனிதப் பற்றையும், பாசத்தையும் போல்; குடும்பப் பற்றையும், பாசத்தையும் போல்; சமுதாயப் பற்றையும் பாசத்தையும், வட்டாரப் பற்றையும் பாசத்தையும் வளர்த்துக் கொள்ள முடியும். இதுவே, ஒட்டுமொத்தமாகத் தமிழர்களை ஒற்றுமைப் படுத்தும்.

அதாவது, அந்தந்த ஊர்க் கோயிலிலுள்ள நூலகம், கருவூலம், காட்சியகம் முதலியவைகளால்தான் அந்தக் கோயிலைச் சார்ந்த வட்டார மக்கள் தங்களின் முன்னோர்களைப் பற்றிய வரலாறு, பண்பாடு, நாகரீகம், சாதனை.... முதலியவைகளைத் தெரிந்தும், புரிந்தும், பாரம்பரியப் பெருமித உணர்வையும், உரிமை உணர்வையும் பெற்றுத் திகழ்ந்திடுவார்கள். இவற்றின் மூலம்தான் தனிமனிதர்களுக்குத் தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும், இனப்பற்றும், மொழியுணர்வும், இனத்தாரோடு ஒற்றுமையோடு கூடி வாழும் விடுதலை வாழ்வில் நாட்டமும் ஏற்பட்டிடும்! ஏற்பட்டிடும்! ஏற்பட்டிடும்!

XI. தமிழகம் முழுவதும் உள்ள கோயில்களைப் பற்றிய விவரங்களும் அவற்றின் சிறப்புக்களும் ஒவ்வொரு கோயிலிலும் அறிவிக்கப் படுகின்ற ஏற்பாடுகள் பல செய்யப் பட்டாக வேண்டும். இதற்காகத் தமிழகத்திலுள்ள கருவறை ஊழியர்கள், மற்றக் கோயில் பணியாளர்கள் கட்டாயமாக அவரவரால் இயன்றளவு தமிழகத்திலுள்ள பல கோயில்களுக்கும் சென்று தங்கி அறிவை வளர்த்துக் கொள்வதோடு; கோயில் ஊழியர்களுக்கிடையிலும், கருவறை ஊழியர்களுக்கிடையிலும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், எல்லாச் சாதியார்களும் அவரவர் ஊழ்வினைப் படியும், விதிப்படியும், ஆர்வப் படியும், முயற்சிப் படியும் இந்துமதத்தின் ஊழியராக, குருமார்களாக, குருக்கள்களாக, பூசாறிகளாக, பண்டாரங்களாக உயர்வதற்கு வழிவகை பிறந்திடும்.

அதாவது, எந்த விதமான சாதி வேறுபாடுகளும் இல்லாமல் யாராக இருந்தாலும் அருளுலகில் எத்தகைய உயரிய அருள் நிலைகளையும் பெறலாம். அப்பொழுதுதான் பிறமண்ணினரான பிரும்மணர் என்னும் வடஆரியர்கள் தமிழர்களுக்கிடையில்; **'வாழுகின்ற இடங்களாலும், செய்கின்ற தொழில்களாலும் இருந்த சிறப்புப் பெயர்கள் கடுமையான ஏற்றத் தாழ்வும், தீண்டாமையும் உடைய சாதிகளாக உருவாக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட சூழ்ச்சிகளை முறியடிக்க முடியும். அதாவது தமிழர்கள் சாதி உணர்வுகளால்தான் பல்வேறு தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிந்து ஒருவரோடொருவர் போட்டியும், பொறுமையும், உயர்வு தாழ்வு வெறியும் வளர்த்துக் கொண்டு; இனப்பற்றையும், மொழிப்பற்றையும், நாட்டுப் பற்றையும் புறக்கணித்து விட்டார்கள்'**. இதனால்தான் அன்னியர்கள் தமிழர்களுக்குள் வேற்றுமையையும், எந்நேரமும் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்ற பிரிவுகளையும் வளர்த்துத் தங்களுடைய ஊடுருவலையும், மறைமுக ஆதிக்கத்தையும், சுரண்டலையும் நிலையாக்கிக் கொண்டு விட்டார்கள்.

இந்த அன்னியர்களின் கோரப் பிடியிலிருந்து தமிழர்களை விடுவிக்க வேண்டுமென்றால் மெய்யான இந்துமதத்தை தமிழர்களாவது முழுமையாகப் புரிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அதற்கு மெய்யான இந்துமதத்தின் வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், மறுமலர்ச்சிக்காகவும், ஆட்சி மீட்சிக்காகவும் நேரடியாகச் செயலில் ஈடுபட வேண்டும். அதற்கு உடனடியாகத் தேவைப்படுவது அன்னிய நாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் தங்களுக்குள் சாதிவெறி இல்லாமல் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு பற்றோடும், பாசத்தோடும் ஒற்றுமையோடும் வாழ்வது போல; தமிழகத்திலுள்ள அனைத்துச் சாதியினரும் சாதிவெறிகளை முழுமையாக விட்டுவிட்டுத் திருமண உறவுகளையும், பிற உறவுமுறைகளையும், உரிமைகளையும் புதுமையாகப் பத்தியின் பேரால் உருவாக்கிக் கொண்டேயாக வேண்டும்.

அதாவது, தமிழன் என்ற ஒரே சொல்லின் கீழ் தமிழகத்து மக்கள் அனைவரும் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் சமத்துவமாகக் கலந்து பழகிப் பற்றோடும், பாசத்தோடும் ஒற்றுமையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். இதன் அடிப்படையில் தான் கண்கவர் விண்ணுயர்ந்த கோபுரங்களைக் கட்டும் பணியிலும், அருட்படை திரட்டுவதிலும், அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபடுவதிலும், இயக்குவதிலும், சாதிமத வேறுபாடுகள் முழுமையாகப்

புறக்கணிக்கப் பட்டுள்ளன! புறக்கணிக்கப் பட்டுள்ளன! புறக்கணிக்கப் பட்டுள்ளன!

எனவே, மெய்யான இந்துமதத்தின் உயிர்நாடிக் கொள்கையான

- ‘மனிதனுக்கு எண்ணற்ற பிறவிகள் உண்டு’;
- ‘மனிதன் ஒரு பிறவியில் பிறக்கின்ற அதே நாட்டிலோ, இனத்திலோ, மதத்திலோ, சாதியிலோதான் மறுபிறவியிலும் பிறக்க வேண்டும் என்பது கட்டாயமுமில்லை! திட்டமுமில்லை!’;
- ‘ஒரு பிறவியில் ஆணாகப் பிறக்கின்றவன் மறு பிறவியில் ஆணாகப் பிறக்க வேண்டும் என்ற கட்டாயமுமில்லை! திட்டமுமில்லை!’ (அருளுலக நியதிப்படி அல்லது நீதிப்படி)
- ‘எந்தவொரு மனிதனும் குருவருளினால் பழம்பிறவித் தொடர்புகளை அறுத்துக் கொள்ளலாம், மறுபிறவிகளைத் தடுத்துக் கொள்ளலாம்’ ....

இந்தப் பலபிறவிக் கொள்கையின் அடிப்படையில் மெய்யான இந்துக்கள் அனைவரும் சாதிவெறிகளை, மதவெறிகளை, இனவெறிகளை, நாட்டு வெறிகளை முற்றிலும் அகற்றிக் கொள்ள வேண்டும். இதுவே அருளாட்சி ஆணையாகும்.

ஆனால் விசயாலயன் காலத்திலிருந்து அருட்பேரரசு உருவாகி வளர்ந்து வளம் பெற்று வலிமையுற்று உயரிய நிலையில் இருக்கும் இன்றைக்கு அருள்மொழித் தேவனான இராசராச சோழன் வடஆரிய மாயையாலும், பிராமணச் சூழ்ச்சியாலும், சனாதன வேதமதப் பித்தாலும், வடஆரியக் களியாட்ட வெறியாலும் விளைந்த அடிமைப் புத்தியால் சாதிவெறிகளை, மதவெறிகளை நியாயப் படுத்தி நீதிக்குரியவையாக்கி விட்டான். இந்தத் தவறான சித்தாந்தத்தின் செயலகமாக யாமுருவாக்கிய தஞ்சைப் பெரியவுடையார் கோயில் பயன்பட்டு விடக் கூடாது.

இதனை மீறுபவர்கள் நெடிதுயர்ந்த வில்லின் அம்புகளுக்கும் கூர் வேலுக்கும் பதில் சொல்லியேயாக வேண்டும். அரசவை முதல் ஆண்டி மடங்கள் வரை இந்த பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாணைகளை ஏற்பவர் என்றும் எதிர்ப்பவர் என்றும் இரு பிரிவினர்கள் தனித்தனியாக அணி திரண்டு போரிட்டேயாக வேண்டும். அதில் கொட்டும் குருதி அள்ளித் தெளிக்கப் பட்டோ அல்லது அருவியாக கொட்டி நீராட்டியோ மெய்யான இந்துமதத்தைப் புனிதப் படுத்தியேயாக வேண்டும். பொய்யான ஹிந்து மதத்தின் உயிர்நாடியான சமசுக்கிருதத்தை ஒவ்வொரு தமிழனும் புரிந்து புறக்கணிக்க வேண்டும் அல்லது புதைகாட்டிற்கு அனுப்ப வேண்டும்.

இனியும் வடஆரிய மாயைகளையும், சனாதன வேதமதத்தின் சுரண்டல்களையும், பிராமணச் சூழ்ச்சிகளையும் அனுமதிக்கவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! அதாவது தமிழர்களை என்றென்றும் ஒற்றுமைப் பட முடியாமல் ஏற்றத் தாழ்வு உணர்வுகளாலும், வேற்றுமை வெறிகளாலும், தொட்டால் தீட்டு எனும் திட்டத்தாலும்.... எண்ணற்றப் பிரிவுகளாக்க முயலும் வடஆரியச் சூழ்ச்சிகளை அழித்தொழித்தேயாக வேண்டும்.

இந்தச் சித்தாந்தத்தின் செயலகங்களாகத்தான் தமிழகத்திலுள்ள 48 வகையான வழிபாட்டு நிலையங்களும், 48 வகையான கருவறைகளும், சித்தியாளர்களும், முத்தியாளர்களும் செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்!

இந்த அருளாணையைக் குருவாணையாக ஏற்றுச் செயல் படுத்துபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் அருட்பேரரசின் வருங்காலமும், தமிழக மக்களின் வருங்காலமும் அமையும். எனவே, பீடாதிபதியின் அருளாணைகளைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக! செயல்படுக! செயல்படுக!

*குறிப்பு:-* **இந்த அருளாணையில் முன்னுக்குப் பின் கருத்து வேறுபாடு இருப்பது போல் தோன்றுகிறது. சாதிவெறியை மட்டும் கண்டிக்காமல் நாட்டு வெறி, இனவெறி முதலியவைகளும் கண்டிக்கப் பட்டுள்ளன. ஆனால், தமிழர்கள் ஒன்று சேருவதற்காக, ஒற்றுமைப் படுத்துவதற்காக வட ஆரியர்களேயும், பிற நாட்டவர்களேயும் எதிர்த்து அல்லது புறக்கணித்துப் போராட வேண்டிய செயல் திட்டத்தையே இந்த அருளாணை வழங்குகிறது. இதற்கு விளக்கமாக குருபாரம்பரியத்தில் உள்ள பல செய்திகளின் அடிப்படையில் ஒரு தெளிவுரை இங்கு வழங்கப் படுகிறது.**

**அதாவது தமிழர்களிலேயே பலர் பிற மொழியினர்களேயும், பிற இனத்தினர்களேயும், பிற நாட்டவர்களேயும் மணந்து தனித்தனிக் கூட்டங்களாகத் தனித்து வாழ நேரிட்டது. அதாவது புதிய புதிய கலப்பினங்கள் தமிழ் நாட்டில் ஆங்காங்கே ஆற்றிடைத் திட்டுக்கள் போல் தனித்தனியாக இருக்கின்றன. இவற்றைத் தமிழர்கள் ஏற்கனவே தங்களுக்குள் இருக்கின்ற சாதி வேற்றுமை வெறிகளோடு சேர்த்து விட்டார்கள். அதாவது, தமிழர்கள், சீனர், சோனகர், யவனர்.... முதலியவர்களோடு திருமண உறவு கொண்டு உருவாக்கிய கலப்பினங்கள் தமிழர்களாக ஏற்றுக் கொள்ளப் படவேயில்லை. எனவே புதிய கலப்பினங்கள் தமிழையே தாய்மொழியாகப் பேசினாலும் கூடத் தமிழர்களால் பற்றோடும், பாசத்தோடும் ஏற்றுக் கொள்ளப் பட்டு ஒற்றுமையான வாழ்வு பெற முடியவில்லை.**

**இதைத் தீர்த்து வைப்பதற்காகத்தான் இந்தப் பதினோராவது அருளாணையில் தமிழர்கள் தமிழர்களுக்கிடையில் சாதி வெறி, இன வெறி, நாட்டுவெறி முதலிய வெறிகளை வளர்க்கக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. இதைத் தவறாக யாரும் புரிந்து கொள்ளக் கூடாது.**

**அதாவது பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரிய வேத இனத்தினரையும் அவர்களின் மொழியான சமசுக்கிருத மொழியையும் புறக்கணிப்பதோ, மறுப்பதோ, வெறுப்பதோ, எதிர்ப்பதோ தவறல்ல என்பதேயாகும். கட்டாயமாக அன்னியரான பிருமணர்களேயும் சமசுக்கிருத மொழியையும் எதிர்த்துப் போரிட்டால்தான் தமிழர்களுக்குள் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உருவாகும். தமிழர்களின் வீழ்ச்சி நிலைகளேயும், தாழ்ச்சி நிலைகளேயும் மாற்றிட முடியும். தனிமனிதர்களுக்குத் தன்னம்பிக்கையும், தன்மானப் பிடிப்பும், பண்பாட்டுப் பிடிப்பும், மெய்யான இந்துமதத்தில் விருப்பும், நம்பிக்கையும், இனஒற்றுமையும், ஆர்வமும், மொழியுணர்வில் வெறியும் பிறப்பிக்கப்படும்! பிறப்பிக்கப்படும்!! பிறப்பிக்கப்படும்!!!**

***இந்த விளக்கத்தைக் கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.***

XII. கோயில் கலைஞர், கூத்தர், மருத்துவர், இசை வேளாளர், ஆசாறியார், ஆசிரியர், பண்டாரம், பூசாறி, குருமார், குருக்கள்.... முதலியவர்களுக்கு அன்றாட உணவும், ஆண்டுக்கு இருமுறை உடையும், ஊதியமும் வழங்கப் படல் வேண்டும். அதாவது உரியவர்களின் உழைப்பு ஆய்வு செய்யப்பட்டு அவ்வப்போது ஊதிய உயர்வும், கூடுதலான ஊதியமும், நன்கொடையும், பரிசும்

வழங்கப் படல் வேண்டும். அப்பொழுதுதான் சமுதாயத்திற்கும், அரசியலுக்கும் தேவையானவர்களை உருவாக்குகின்ற ஒரு சாதனமாகச் சமயம் பயன்பட்டிடும்.

இல்லாவிட்டால், சமயம் சத்திரம் சாவடிகளால் சோம்பேறிகளையும், பிச்சைக்காரர்களையும், கருத்துக் குருடர்களையும், பொருள் திருடர்களையும், மூடப் போக்குடையவர்களையும் அதிகமாக உருவாக்குகின்ற ஒன்றாகிடும். அதாவது, சமயத்தின் கல்வியும், கலையும், பயிற்சியும், முயற்சியும், தேர்ச்சி முதிர்ச்சியும் சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கைக்கும், அரசியலின் ஆட்சிநிலைகளுக்கும் தொடர்பே இல்லாமல் போய்விடும்! தொடர்பே இல்லாமல் போய்விடும்! தொடர்பே இல்லாமல் போய்விடும்!

இதனால், காலப்போக்கில் அரசுக்கு உரியவர்களும், சமுதாயத்திற்கு உரியவர்களும் சமயத்தைத் தேவையற்றதாக, பயனற்றதாக, உண்மையற்றதாக, சமுதாயத்திற்கும் அரசியலுக்கும் கேடு விளைவிப்பதாகக் கருத நேரிட்டு விடும்.

அதனால், மெய்யான இந்துமதத்திற்காகக் கருகுலங்கள், குருகுலங்கள், தருகுலங்கள், திருகுலங்கள் நாடெங்கும் தேவைக்கேற்ப அமைக்கப் பட்டு (i) இந்திரிய ஒழுக்கம், (ii) செயல் ஒழுக்கம் (பயிற்சிநிலை), (iii) சீவ ஒழுக்கம், (iv) ஆன்ம நேய ஒழுக்கம்...... முதலியவைகளை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்கி மெய்யான இந்துமதக் காவலர்களை உருவாக்கிட முடியும்.

இவற்றோடு தனிமனிதத் தற்காப்புக்கும் போருக்கும் பயன்படக் கூடிய சேவலோன் கலைகள் (போர்க்கலைகள்) பயிற்றுவிக்கப்பட்டு

- "வீடும் நாடும் காக்கும் வீர விளையாட்டுக்களே மெய்யான இந்துமதத்தின் சிறந்த பூசைமுறை",
- "மெய்ப் போர்க்கலையும், ஆயுதப் போர்க்கலையும் வளர்க்கும் நிலையமே கோயில்",
- "தினப்பூசையிலும் திருவிழாவிலும், திருநாளிலும் மெய்ப் போர்க் கலைகளும், ஆயுதப் போர்க் கலைகளும் அரங்கேற்ற மாவதே மெய்யான இந்துமதம்",
- "அன்றாடப் பூசைக்கோ, திருநாளுக்கோ, திருவிழாவுக்கோ செல்லுபவர்கள் முதியோர், இளையோர் என்றோ அல்லது ஆண், பெண் என்றோ.... எவ்வித வேற்றுமையும் பாராட்டாமல் ஒவ்வொருவரும் திரிசூலமோ, வேலோ, வாளோ, வில்லோ, மடுவோ (மான்கொம்பு) .... கையில் எடுத்துச் சென்றுதான் வழிபாடு செய்து அருளைப் பெற்று வர வேண்டும் என்ற தத்துவமே மெய்யான இந்துமதம்";
- "மனிதன் ஏழையாக இருக்கலாம், ஆனால் கோழையாக இருக்கக் கூடாது என்ற சித்தாந்தத்தை உடையதே மெய்யான இந்துமதம்"

....

இப்படிப்பட்ட மெய்யான இந்துமதத்தின் அடிப்படைக் கருத்துக்கள் அநுபவப் பூர்வமானவைகளாக ஆக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் மெய்யான இந்துமதம் தமிழினத்திற்குத் தலைமை தாங்குவதாகவும், வழிகாட்டுவதாகவும், வழித்துணையாக வாழ்வதாகவும், உயிர்த் துடிப்போடு உயரிய பெரியபெரிய பயன்களை நல்குவதாகிடும்! நல்குவதாகிடும்! நல்குவதாகிடும்!

***குறிப்பு:-***

(i) **இந்திரிய ஒழுக்கம்:-** உடல் தூய்மை, உடைத் தூய்மை, உள்ளத் தூய்மை, சிந்தைத் தூய்மை, செயல் தூய்மை, உடல்நல வளம்.... முதலியவைகளைப் பேணல் இந்திரிய ஒழுக்கம் எனப்படும்.

(ii) **செயல் ஒழுக்கம் அல்லது பயிற்சி ஒழுக்கம்**:- பத்தி, சத்தி, சித்தி, முத்தி முதலியவைகளுக்காகத் தனித்திருத்தல், பசித்திருத்தல், விழித்திருத்தல், சிந்தித்திருத்தல் அல்லது தத்துவங்களை ஆராய்தல், பொறுத்திருத்தல், உரிய சூழல் உருவாகாமல் எதனையும் வெளியிடாமல் அடக்கமாயிருத்தல் முதலியவை காரண ஒழுக்கம், செயல் ஒழுக்கம், பயிற்சி ஒழுக்கம் என்ற பெயர்களால் குறிக்கப் படுகின்றது.

(iii) **சீவ ஒழுக்கம்**:- பயிரினங்களும் உயிரினங்களும் சமமானவையே. இவற்றிற்கிடையே எந்த வித உயர்வு தாழ்வும் பாராட்டாமல் இருத்தல். உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை விரும்புதல், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கப் பாடுபடுதல்; ..... முதலியவைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதே சீவ ஒழுக்கம்.

(iv) **ஆன்ம ஒழுக்கம்**:- 'முற்பிறவி, மறுபிறவி, இப்பிறவி பற்றி ஆராய்தல்', 'ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றையும் தெரிந்து புரிந்து ஒன்ருக்கி, ஒருருவாக்கிப் (ஓர்+உருவாக்கி) பிறவாமையும், இறவாமையும் பெற முயற்சித்தல்'; 'பல்வேறு வகையான பூசை மறைகளையும், முறைகளையும், நெறிகளையும், வேதங்களையும், பிற விதிகளையும் உணர முற்படல், செயலாக்க முற்படல்'; 'குருவைத் தேடி அலைதலும், கிடைத்த குருவை முழுமையாக ஏற்றுப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பணிந்து பயன்படுத்திக் கொள்ளலும்'; 'போதனையாளர்களுக்கும் சாதனையாளர்களுக்கும் இடையே சோதனையாளர்களாக வாழாமல் ஆற்றின் போக்கில் செல்லும் தெப்பம் போல் வாழல்' .... முதலியவையே ஆன்ம ஒழுக்கம் எனப்படும்.

மேற்கூறிய இந்நான்கு ஒழுக்கங்களையும் செயல்படுத்துவதற்காக

(அ) தன்னையறிதல் = ஏமசித்தி,

(ஆ) தலைவனையறிதல் = கடவுளோடு இரண்டறக் கலத்தல்

(இ) குருட்டுத் தனமாக எதனையும் ஏற்றுக் கொள்ளாமல் தத்துவ விசாரணை செய்தல்

(ஈ) மெய்யான இந்துமதத்திற்குரிய சாகாக் கல்வி, வேகாத் தலை, போகாப் புனல்.... முதலியவற்றைக் குருவழி கற்றல் அல்லது திருவழி உணருதல்.

இந்த நான்கினையும் கருவழியாகவோ அன்றித் திருவழியாகவோ அடைதல் வேண்டும்.

[*தத்துவாதி நிலை → தத்துவ விசாரணை = தத்துவ ஞானம்; கடவுளாதல் → சீவான்மா பரமான்மாவோடு கலத்தல், → இறையோடு இரண்டறக் கலத்தல்]

***[தொடர்ச்சி அடுத்த இதழில்]***



சென்னை, காரணேடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.